**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம்,**

**பெரியகுளம்**

எ.ம.சா. 2 நாள் 23 .04.2025

வழக்கு எண் **MCOP No. 25/ 2023**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : Dr.அஸ்வத் ராஜன் | ஊர் | : | பழனி |
| தகப்பனார் பெயர் | : ராஜன் | தாலுகா | : | பழனி |
| தொழில் | : மருத்துவர் | வயது | : | 33/2025 |
| | ஆயக்குடி GH | | | |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**2 ஆம் எதிர் மனுதாரர் தரப்பில் 2 ம் சாட்சி முதல் விசாரணை**

நான் தற்போது பழனி ஆயக்குடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் 22.04.2022 ஆம் தேதியில் நான் வத்தலக்குண்டு அரசு மருத்துவமனையில் ஒரு நாள் deputation ல் பணியில் இருந்தேன். அப்போது பெரியகுளம் G. மீனாட்சிபுரத்தை சேர்ந்த பர்மாதுரை அவர்களின் மகன் சதீஸ் குமார் என்பவரை விபத்தில் காயம் அடைந்து முதலுதவி சிகிச்சைக்காக கொண்டு வந்தார்கள். மேற்படி நபரை பரிசோதித்த போது அவருக்கு இடது காலில் அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு இருந்தது, இடது தலையில் சிராய்ப்பு காயம் 2 X 1 செ.மீ அளவில் காயம் காணப்பட்டது மற்றும் வலது கால் கட்டை விரலில் சிராய்ப்பு காயம்

காணப்பட்டது. நான் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து எலும்பு முறிவு இருந்ததால் அவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். நான் அவரை பரிசோதித்த போது அவர் மது அருந்தி இருந்தார். நான் அவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு நகல் எ.ம.சா.ஆ. 11 ஆகும்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தில் காயம் பட்ட சதீஸ்குமாருக்கு நான் தான் முதலுதவி சிகிச்சை அளித்தேன் என்றால் சரிதான். சதீஸ்குமாருக்கு breathing analyzer test எடுத்தேனா என்றால் இல்லை. breathing analyzer test எடுத்தால் தான் சதீஸ்குமார் மதுவின் தாக்கத்தில் இருந்தாரா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான். சதீஸ்குமாருக்கு இரத்த கொதிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். சதீஸ்குமாருக்கு இரத்த பரிசோதனை செய்தால் தான் அவர் மதுவின் தாக்கத்தில் இருந்தாரா என்பது தெரியவரும் என்றால் சரிதான். நான் மேற்படி பரிசோதனை எதுவும் செய்யாமல் சதீஸ்குமார் மது அருந்தி இருந்தார் என்று விபத்து பதிவேட்டில் சொல்லி இருப்பது தவறு என்றால் சரியல்ல, மேற்படி பரிசோதனைகளை செய்வதற்காகவும் தான் நான் அவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். சதீஸ்குமார் மது அருந்தி இருந்தால் அவரது பிரேத பரிசோதனையில் அது தெரிய வரும் என்றால்

நான் பார்த்த போது சதீஸ்குமார் உயிருடன் தான் இருந்தார், மேலும் பிரேத பரிசோதனை எப்போது நடத்தப்பட்டது என்பதன் அடிப்படையிலும் தான் அது தெரியவரும். விபத்து சமயத்தில் சதீஸ்குமார் மதுவின் தாக்கத்தில் இல்லை என்றாலும் அவர் தெளிவாக தான் இருந்தார் என்றால் நான் பரிசோதித்த போது அவரது மூச்சுக்காற்றில் மதுவின் நெடி இருந்தது. நான் தவறாக எ.மா.சா.ஆ 11 விபத்து பதிவேடு கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.